Register Number

**Part III**

# இந்தியப் பண்பாடு

# INDIAN CULTURE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

I. கீழ்க்காணும் எல்லா வினாக்களுக்கும் விடையளி.

A. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக. 10 × 1 = 10

1. திணை என்பது

அ) நடத்தை ஆ) பழக்கம்

இ) ஒழுக்கம் ஈ) தானியம்.

2. பாறையைக் குடைந்து கோயில் கட்டியவர்கள்

அ) சோழர்கள் ஆ) சேரர்கள்

இ) பாண்டியர்கள் ஈ) பல்லவர்கள்.

3. கடல்மகள் எனப்படுபவர்

அ) சரஸ்வதி ஆ) இலக்குமி

இ) மீனாட்சி ஈ) பார்வதி.

4. அக்னியின் பெருமையைக் கூறும் புராணம்

அ) விஷ்ணுபுராணம் ஆ) மகாபுராணம்

இ) சிவபுராணம் ஈ) ஆக்னேய புராணம்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



5. பிந்திய வேதகாலத்தில் ஆரியர்கள் தெய்வங்களை எத்தனை வகைகளாகப் பிரித்தனர் ?

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து.

6. திரிரத்தினங்கள் அல்லது மும்மணிகள் என்று கூறப்படும் கோட்பாடுகள் அடங்கிய சமயம்

அ) புத்த சமயம் ஆ) இந்து சமயம்

இ) சமண சமயம் ஈ) சீக்கிய சமயம்.

7. நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தொகுத்தளித்தவர்

அ) நாதமுனிகள் ஆ) நாயன்மார்கள்

இ) நம்பியாண்டார் நம்பி ஈ) ஆழ்வார்கள்

8. தன்னலம் கருதாது உலக சமுதாய நலனுக்காகவும், இன வேறுபாடுகளையும் சாதிக் கொடுமைகளையும் களைய பெருந்தொண்டாற்றி வரும் சமயம்

அ) இஸ்லாம் மதம் ஆ) இந்து மதம்

இ) சமண மதம். ஈ) கிறித்துவ மதம்.

9. பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ண பக்தி அவசியம் என்று கூறியவர்

அ) துளசிதாசர் ஆ) கபீர்

இ) துக்காராம் ஈ) மீராபாய்.

10. சிந்தனை, சொல், செயல் இம்மூன்றாலும் உலகில் வாழும் எவ்வுயிர்க்கும் தீங்கு நினையாது இருப்பது

அ) சத்தியம் ஆ) சர்வோதயம்

இ) அஹிம்சை ஈ) ஒழுக்கம்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

B. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க : 10 × 1 =

11. பண்பாடு என்பது ........................ வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

12. வெண்ணிற ஆடையை அணிபவர்கள் ........................ எனப்பட்டனர்.

13. கண்ணன் விளையாடிய நதிக்கரை ........................ .

14. கிராமத்தின் தலைவன் ........................ என்று அழைக்கப்பட்டான்.

15. அகத்தியம் என்னும் முதல் தமிழ் நூலை இயற்றியவர் ........................ ஆவார்.

16. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்ட சமயம் ........................ எனப்பட்டது.

17. குப்தர்கள் காலத்தில் அழியாப் பொருளான ........................ பயன்படுத்தி கட்டிடங்கள் கட்டினார்கள்.

18. கிறித்துவர்களின் புனித நூல் ........................ என்பதாகும்.

19. நிம்பார்க்கரின் பக்தி நெறிக்கொள்கை ........................ என்றழைக்கப்படுகிறது.

20. சதி என்னும் உடன்கட்டையேறுதலை .................. வன்மையாகக் கண்டித்தார்.

C. பின்வருவனவற்றை பொருத்துக : 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 21. | முப்பால் | அ) | கனியன்பூங்குன்றனார் |
| 22. | நிஷ்கா | ஆ) | பௌத்த வேதநூல் |
| 23. | ஆதிகிரந்தம் | இ) | காந்தியடிகள் |
| 24. | உபநிடதம் | ஈ) | நம்மாழ்வார் |
| 25. | யாதும் ஊரே யாவரும் கேளிர் | உ) | காடு |
| 26. | திரிபீடகம் | ஊ) | திருக்குறள் |
| 27. | இண்டிகா | எ) | சீக்கிய சமயம் |
| 28. | வெள்ளையனே வெளியேறு | ஏ) | நாணயம் |
| 29. | திருவாய்மொழி | ஐ) | வேதங்களின் சாரம் |
| 30. | ஆரண்யகம் | ஒ) | மெகஸ்தனிஸ். |

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

D. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு சொற்களில் விடையளி 15 × 1 = 15

31. பண்படுத்துதல் என்ற சொல்லின் பொருள் யாது ?

32. இந்தியாவின் 'இருபெரும் இதிகாசங்கள்' யாவை ?

33. சிந்துவெளி மக்களின் 'எழுத்து முறை' யாது ?

34. தமிழில் 'வித்' என்னும் சொல்லின் பொருள் என்ன ?

35. 'திராவிட மொழிகள்' யாவை ?

36. 'ஜினா்' என்ற சொல்லின் பொருள் யாது ?

37. புத்தரின் இயற்பெயர் என்ன ?

38. முத்ரா இராட்சஸம் என்ற நூல் யாரால் எழுதப்பட்டது ?

39. இந்தோ ஆரியர்கள் யார் ?

40. பிரம்மவேதம் எனப்படுவது யாது ?

41. சூபி இயக்கத்தை தோற்றுவித்தவர் யார் ?

42. இந்து எனப்படுபவன் யார் ?

43. பக்தியின் இருவகைகள் யாவை ?

44. பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தவர் யார் ?

45. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன ?

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஆ

II. எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகட்கு மிகாமல் விடையளி : 15 × 3 = 45

46. பண்பாடு பற்றி டாக்டர் சர். சி. பி. இராமசாமி அய்யர் கூறுவது யாது ?

47. நாகரிகம் சொல் விளக்கம் தருக.

48. இந்தியாவை 'இன அருங்காட்சியகம்' என டாக்டர் ஸ்மித் கூறக் காரணம் யாது ?

49. சிந்து சமவெளி மக்களின் உணவு, உடை பற்றி எழுதுக.

50. சம்ஹிதைகள் - பற்றிக் கூறுக.

51. குறிஞ்சித்திணை - பற்றிய செய்திகளைக் கூறுக.

52. 'நடுகல்' வணக்கம் பற்றி நீவிர் அறிவன யாவை ?

53. இந்து சமயம் வலியுறுத்தும் நான்கு மார்க்கங்கள் யாவை ?

54. புத்தமதத்தின் நான்கு ஆரிய சத்தியங்கள் யாவை ?

55. 'சபா', 'சமிதி' பற்றி எழுதுக.

56. பிற்காலப் பாண்டியர்களின் இலக்கிய வளர்ச்சி பற்றிக் கூறுக.

57. சோழர்கால சிற்பங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

58. இஸ்லாமியர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவை ?

59. ஜி. யு. போப் ஆங்கில மொழியாக்கம் செய்த தமிழ் இலக்கிய நூல்கள் யாவை ?

60. ஆழ்வார்கள் - விளக்குக.

61. துளசிதாசரின் - பக்தி இயக்கப் பணியைக் கூறுக.

62. சத்தியாகிரகம் பற்றி காந்தியடிகள் கூறுவன யாவை ?

63. கல்வி பற்றி காந்தியடிகளின் கருத்துக்களை எழுதுக.

64. இந்தியா 'தரும பூமி' என அழைக்கப் பெறுவதேன் ?

65. இந்தியப் பண்பாட்டில் மரங்களுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - இ

III. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகட்கு மிகாமல் விடையளி : 10 × 6 = 60

66. பண்பாடு பற்றி சான்றோர்களின் கருத்துக்களை தொகுத்துக் கூறுக.

67. சிந்துவெளி மக்களின் கலையினைப் பற்றி விவரி.

68. ரிக் வேத கால சமுதாய நிலையினை விவரி.

69. இயற்றமிழ் பற்றி ஆசிரியர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

70. தமிழர் பண்டிகையான பொங்கல் திருநாளைப் பற்றி எழுதுக.

71. இந்து சமயப் பெருமைகளாக ஆசிரியர் கூறுவன யாவை ?

72. இந்தியப் பண்பாட்டிற்கு சிந்து சமவெளி நாகரீகத்தின் கொடை யாது ?

73. பல்லவர்களின் கட்டிடக் கலை வளர்ச்சி பற்றி விவரி.

74. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ‘கிறித்துவத் தொண்டு’ நிறுவனங்களின் பணிகள் யாவை ?

75. கபீர் தாசரின் பக்தி இயக்கப் பணியைக் கூறுக.

76. புராணங்களின் இன்றியமையாமை யாது ?

77. பிற்காலப் பாண்டியரின் கலை வளர்ச்சியை விவரி.

78. இந்தியப் பண்பாட்டிற்கு இஸ்லாம் மதத்தின் கொடை யாது ?

79. சுதேசி இயக்கம் பற்றி காந்தியடிகளின் கருத்து யாது ?

80. ‘இந்தியர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர்’ - விளக்குக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஈ

IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் விடையளி: 5 × 10 = 50

81. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை யாது ?

82. இந்தியப் பண்பாட்டிற்கு பௌத்த சமயத்தின் கொடையை விவரி.

83. குப்தர்கள் கால கலை, இலக்கிய வளர்ச்சிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

84. ஆழ்வார்களின் அரிய அருட்தொண்டுகளை விவரி.

85. ஆரிய சமாஜத்தின் செயல்பாடுகள், சமூக, சமுதாய சேவைகளை விவரி.

86. இந்தியாவில் நிலவும் வேற்றுமைக்கிடையே ஒற்றுமை எவ்வாறு திகழ்கிறது விவரித்து எழுதுக.

87. இந்தியப் பண்பாடும், சுற்றுச் சூழலும் பற்றி கட்டுரை வரைக.

---

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers